உ

ஸ்ரீராமஜெயம்.

விசித்திர

# ஜெகஜாலக்கண்ணாடி

ஆரும்பாகம்.

இவை - செஞ்சி

ஏகாம்பர முதலியாராலியற்றப்பட்டு



நுங்கம்பாக்கம்

## அருணகிரிமுதலியார்

அவர்களது,

அம்பாளச்செந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1896.

உ

கடவுள் துணை.

# விசித்திரஜெகஜாலக்கண்ணாடி

## காப்பு- விருத்தம்.

ஆதிபராசத்தியுட பாதம்போற்றி
அகிலமுதலளித்தபராம் சிவமேபோற்றி
சோதியாய்விளங்கும்கரி மாலேபோற்றி
சொல்லுக்குமுன்னுதவுங் கணனேபோற்றி
நீதியாய்மயிலேறும் முருகாபோற்றி
நிலைக்கவேமறைவோதும் பிரமமேபோற்றி
சோதியாய்சித்தருட பாதம்போற்றி
சுகமளிக்கும்ஜாலக்காள் அருளேபோற்றி

## நூலின் பெருமை,

கேள்ப்பாவினோத விச்சித்திரமென்னும்
கெடியான ஜெகஜ்ஜாலக்கண்ணாடிதன்னை
வாளப்பாபோகரவர் முற்காலத்தில்
வளமானபதினெண்மர் சித்தருக்கும்
தாளப்பாதானுரைத்த இந்நூலாகும்
தயவாகப்பூலோக மாந்தருக்கு
வேளப்பாவிளம்புகிறேன் யானுமிப்போ
விநோதமாம் விசித்திரசெகச்சாலந்தானே

## கண்ணாடியாவது-புட்டியாவது-நூலால்-அறுக்குஞ்ஜாலம்

கண்ணாடிஅறுக்க ஒரு ஜாலங்கேளு
கண்மணியே ரவையுமல்ல சூட்சம்பாரு
நண்ணாகமுருக்கனிலை கொண்டுவந்து
நயமாகசாரதனில் புழிஞ்சிக்கொண்டு
பண்ணவேவுண்டைநூல்வாங்கிவந்து
பண்பாகதோய்த்ததனில் வுலரவைத்து
கண்டிருக்கும் சபையோர்க்கு நன்றாய்க்காட்டி
கயற்றுநூலால்அறுக்க ரெண்டுதுண்டாய்ப்போமே,

வ-ம், முருக்கன்யிலே கொண்டு வந்து சார்பிழிந்து வுண்டை நூல் வாங்கி அந்தரசத்தில் தோய்த்து வுலரவைத்து காய்ந்தபிறகு புட்டியாவது கண்ணாடியாவதுயிந்தநூலால் அறுத்தால் யிரண்டுதுண்டாய் விடும் நூல்வளையாமல் நிகளமாய் வுலர்த்தவும் ௬௬

## கண்களில் மணலைக்கொட்டிக்கொள்ளும் சாலம்,

சுத்தமாய்யாவர்களுங் கண்டுகொள்ள
  சொல்லுகிறேனின்னமொரு வித்தைகேளு
நத்தைச்சூரியென்னுமொரு வேரைக்கொண்டு
  நன்றாகவாய்தனிலே அடக்கிக்கொண்டு
சித்தத்தில்கூச்சமதை வைத்திடாமல்
  சல்காளியென்றுகண்ணில் மணலைப்போட்டுக்கொள்ளு
அத்தனருளால்கண்ணு மருவாதப்பா
  அனைவோரும் ஆச்சரியம்கொள்வார்தானே

வ-ம், நத்தைச்சூரியென்கிற வேரைக்கொண்டுவந்துகொஞ்சம் சிறியதுண்டாய் வாயில்போட்டு அடக்கிக்கொண்டு கண்களில் மணலைப்போட்டுக்கொண்டால் கண்ணு அறுவாது சபையோர்களுக்கு நன்றாய் காட்டினபிறகு சல் மலையாளி கீழேபோவென்று தலையைக் குனிந்தால் ப்லபலவென்றும்மணல் விழுந்துவிடும் மந்திரமென்று மயங்குவார்கள். ௭௰

## வாட்டிலோடு மெல்லுஞ்ஜாலம்

ஆச்சரியமானதொரு ஜாலங்கேளு
  அப்பனேகோபுரம் தங்கிவேரை
கூச்சமில்லாவாய்தனிலே அடக்கிக்கொண்டு
  கொற்றவனேசபைதனிலே வந்துநில்லு
பட்சமாய்வாட்டிலோடை கையிலேந்தி
  பார்த்திருக்கும் சபையோர்க்கு நய்றாய்க்காட்டி
நிட்சயமாய்வந்தனங்கள் மிகவேசெய்து
  நில்லடிகாளியென்று மெல்லலாமே

வ-ம், கோபுரம்தங்கியென்ற வேரைக்கொண்டுவந்து அதில் சிறியதுண்டாய் வாயில்போட்டு கசகசவென்றுமென்று அடக்கிக்கொண்டு வாட்டிலோட்டைப்போட்டுகடித்தால் முருக்கைப்போல் மென்று விடலாம் வாய் அறுக்காது குழகுழப்பான வஸ்துவெதுவானுலுஞ் சரியே, ௭௧

## ஒருபசுவில் இரண்டுவிதம்பால்கரக்கும் சாலம்

பாரப்பாசபைதனிலே வாறுமுன்னம்
  பசுவினிடகொம்பிலே சொல்லக்கேளு

கோரகசித்திரமூலம் வேரரைத்து
நிட்சயமாய் வொருகொம்பில் பூசிவிட்டு
சிராகசபையோர்க்கு வந்தனங்கள்செய்து
சொம்பெடுத்து அனைவருக்கும் நன்ருய்க்காட்டி
விரைவாகவுட்கார்ந்து கரந்துநீதான்
வேடிக்கையிரண்டுவிதங் காட்டலாமே

வ-ம், பசுவை சபைக்குகொண்டு வருமுன்னம் சித்திரமூலம் யென்றவேரை அரைத்து ஒருகொம்பில் பூசிவிட்டால் பூசினபக்கம் யிரத்தமாகக்கரக்கும் மற்ற ஒருபக்கம் யெப்போதும்போல் வெளு மையாக யிருக்கும் மறுபடியும் இரண்டையும் வெளுமையாக்க வே ணுமென்ருல் பூசினகொம்பை ஜலம்விட்டு கழுவினுல்வெளுமையாய் விடும் கண்டவர்கள் ஆச்சரியப்படுவார்கள். எஉ

தேங்காயுடைத்து உள்ளே முட்டை காட்டுஞ் சாலம்

மந்திரமோதந்திரமோ வென்றுசொல்லி
மதிமயங்கயின்னமொரு சூட்சம்பாரு
தந்திரமாய்தேங்காயை கொண்டுவந்து
தயவாகவொருகண்ணை துவாரஞ்செய்து
மைந்தனேகோழிமுட்டை தனையெடுத்து
மறவாமல்சீமையுட காடிதன்னில்
சிந்தையுடன்வூரவைத்து வள்ளேவிட்டு
சிறப்பாகவாய்மூடி வுடைத்துப்பாரு

வ-ம், ஒருதேங்காயை கொண்டுவந்து மூன்றுகண்ணில் ஒருக ண்ணை துவாரம்செய்து குடுமைபிக்காமல் வைத்துக்கொண்டு ஒரு கோழிமுட்டையாவது அல்லதுபாத்து முட்டையாவது சீமைகாடி யில் ஒரு நாள் முழுமைக்கும் வூரவைத்து கையில்யெடுத்தால் ஜவ் வைப்போல் நிகளும் அதை தேஙகாவுள்ளர விட்டு விட்டால் யெப் போது போல் முட்டையாய் விடும் சலத்தையெல்லாம்கொட்டிவிட் டு நல்ல சலம்விடவும் அந்ததுவாரத்தை மொழுக்கால் அடைத்துவி ட்டு சபையோர்களுக்கு நன்ருய் காட்டி வுடைத்தால் பார்த்தவர் ஆச்சரியப்படுவார்கள் எங

வயற்றைக்கீறி நூல்யெடுக்குஞ் சாலம்

வயற்றிலேநூலெடுக்குஞ் சாலந்தன்னை
வையகததில்சொல்லுகிறேன் வழியாய்தானே
பொய்யென்றுவுன்மனதில் யெண்ணவேண்டாம்
புண்ணியனேமானுடைய ஜவ்வைவாங்கி

துய்யவனே நாலுண்டை வுள்ளேவைத்து
சுற்றிலுமேவிளாப்பிசினிபூசுபூசு
அய்யமில்லா அடிவயற்றில் ஒட்டிவிட்டு
அறுத்துமேனூலெடுத்து காட்டலாமே

(வ-ம்) மானுடைய ஜவ்கொண்டுவந்து சதரத்திற்கு சதரம் நாலு அங்குலம் அளவுயிருக்கும்படியாய் வொருதுண்டையெடுத்து அதின்மத்தியில் வுண்டைநூல் கொண்டுவந்து அதில்பாதி அந்தஜவ்வின்நடுவில்வைத்து நூலில்படாமல் சுத்திலும் விளாப்பிசினிபூசி யிடதுபக்கமாவது வலதுபக்கமாவது வயிற்றில் தொப்புளுக்கு பக்கத்தில் யிந்தநூலைஜவ்மத்தியில்வைத்து ஒட்டிவிட்டால் உடம்போடுஜவ்வும் ஒன்ருய்கலந்துவிடும் பார்த்தவர்கண்ணுக்கு தெரியாது கொஞ்சம்நூலை எடுத்து கொளுத்தி அனைவருக்குங் காண்பித்து அந்த சாம்பலை வாயில் போட்டு முழுங்கிவிட்டு யிந்தசாம்பலை நூலாக்கியெடுக்கிறேன் பாரென்று ஒட்டின யிடத்தில் நூல்முனையை கத்தியால்சிறி சல்மலையாளபகவதி நூல்வோடிவாவென்று இழுத்தால் நூல்வரும்பார்த்தவர்களெல்லாம் வயற்றிலிருந்து தான்வருகுதென்று ஆச்சரியப்படுவார்கள் நூல்ஒட்டும்போது முனையையடையாளமாகபார்த்து வைக்கவேண்டியது

## கோழிமுட்டைபறக்குஞ்சாலம்,

கேளப்பாகோழிமுட்டை கொண்டுவந்து
குணமாகவெள்ளையம் பிலியைபோக்கி
வுள்ளுக்குரசம்அரை பலந்தான்வூத்து
வுத்தமனேபனித்தண்ணீர் கொஞ்சம்விட்டு
சொல்லிவந்ததினுசெல்லாம் வுள்ளேவூத்து
சுறுக்காகசிறுதொளையை அடைத்துப்போட்டு
கள்ளமில்லாவெய்யலிலே வைத்தாயானல்
கண்மணியேசூடேற பரக்கும்பாரே

(வ-ம்) ஒருகோழி முட்டையில்சிறியதுவாரம்செய்து பாதி அம்புலியை வூத்திவிட்டு இரசம் அரைப்பலமும் பனிதண்ணீர் கொஞ்சம்விட்டு துவரத்தை காகிதத்தால் மூடிவிட்டு வெய்யலில் வைத்தால் சூடு ஏரகீழ்நில்லாது ஜனங்கள்யிது அந்தரதேவதை வசியமென்பார்கள், எடு

## கையில்வெத்திலைசுண்ணும்புசிவக்குஞ்ஜாலம்.

காரணமாய்யின்னமொரு வித்தைகேளு
கரிவேலன்கொழுந்ததனை கொண்டுவந்து
நேராகஒருவருக்கும் காட்டிடாமல்
வுன்கையில்கசக்கியே வொலரவைத்து

சீராகசபையோர்க்கு கையைகாட்டு
வெத்திலேசுண்ணாம்புவைத்து கசக்கிப்பாரு
கூறியதோர்சபையோர்கள் ஆச்சறிக்க
குப்பென்றுவுன்கையும் சிவக்கும்பாரே

(வ-ம்) கரிவேலன் கொழுந்தை கொண்டுவந்து கையில் ... து கசக்கி சார்கையில் தங்கும்படியாக வுலரவைத்து காய்ந்தபிறகு கைதட்டி சபையோற்கு நன்றாககாண்பித்துவிட்டு சுண்ணாம்புவெத்திலேயும் கொண்டுவரச்சொல்லி கசக்கினால்குப்பென்றதாக கைசெவக்கும் யிதுபலேஜோக்கென்று சபையோர் மயங்குவார்கள் எசு

## நெல்லுபொரிபொரிக்குஞ்ஜாலம்,

சொல்லுகிறேன்மதியினால் செய்யும்வித்தை
சூக்ஷமப்பாபார்த்தவர்கள் ஆச்சரிக்க
நெலலென்றால்பச்சைநெல்லே கொண்டுவந்து
நீசென்றுசுண்ணாம்பு கால்வாயினருகே
ஜல்லியதுகொட்டுகிற யிடத்தின்மேலே
தான்பரப்பிமண்ணேமேல் போட்டுவிட்டால்
சொல்லியதோர்நாலுமணி நேரம்தங்கி
சூட்சமப்பாயெடுத்துவந்து பொறித்துபாரே

(வ-ம்) பச்சநெல்லே கொண்டுவந்து சுண்ணாம்புகால்வா அருகிற்சென்று சுண்ணாம்பு கொட்டும் யிடத்தில் கொஞ்சம்மண்ணை தோண்டிவிட்டு ஒருபடியாகிலும் அரைபடியாகிலும் பரப்பிவிட்டு மேல் மண்ணேபோட்டு மூடவும் ஜல்லிதாளித்தபிறகு யிதைவாரியெடுத்துக்கொண்டுவந்து முறத்திலேயாவது துணிசவுக்கத்திலாவது வொருபிடிநெல்லேப்போட்டு சல்யட்சணி நெல்லேபொறி பொரிக்கவேணுமென்று கொஞ்சம்தண்ணி தெளித்துவரத்தால் பளபளவென்று பொரியும் எஎ

## மணலேஅலுவாசெய்யுஞ் ஜாலம்

சீராககல்கண்டுபலந்தான்வொண்ணு
செப்பியதோர்பாதமி பிசினிவொன்றே
நேராககுங்கும்ப்பூ வறாகனிக்கால்
நிக்ஷயமாய்யிம்மூன்றும் தூள்ளாய்செய்து
சீராகயிதுவேறே வைத்துக்கொள்ளு
செப்புகிறேன்தந்திரத்தை சீராய்கேளு
கொற்றவனேமணலெடுத்து காட்டிகொட்டி
கூட்டியேயிம்மூன்றும் மாட்டுவாயே

(வ-ம்) சீனிகற்கண்டு பலம்ஒண்ணு பாதம்பிசினிபலம் ஒண்ணரை குங்குமப்பூ வராகனிடை அறிக்கால் யிம்மூன்றையும் மணல்

போல் தூளாய்செந்து வைத்துக்கொண்டு யிருக்கவும் ஒருபீங்கானி ல்மணலைபோட்டு அனைவருக்கும்காட்டி யிந்தமணலை அலுவாசெய் கிறேன்பாரென்று துணியை மேலேபோட்டு மூடிவிட்டுஅந்தமண லைகீழே மறைத்துவிட்டுயிந்த அலுவாதினுசை துணியிலாவது ஜோ ல்காவிலாவது வைத்திருந்து அந்தபீங்கானில் போட்டு மருபடியும் துணியைதிறந்து காண்பித்தால் மணல் போலவேயிருக்கும் அனைவ ர்களுக்குங்காண்பித்து விட்டுகொஞ்சம் ஜலம்வார்த்துசலபகவதியெ ன்றுமூடிவிட்டு சற்றுநேரம்பொறுத்து திறந்தால் அல்வாவைப்போ ல் பந்தனையாய் யிருக்கும் கத்தியால் அறுத்துசபை யோர்களுக்கு கொடுக்கலாம் யிதைமகா தந்திரமாக செய்யவேண்டியது மந்திரமெ ன்றே நம்புவார்கள் எஅ

பந்தம்கொளுத்திவாயில்வைக்குஞ்ஜாலம்.

பாரப்பாகற்பூரம் வாயில்போட்டு
பக்குவமாய்மென்றுமே துப்பிவிட்டு
சீராகபந்தமதை கொளுத்திக்கொண்டு
சபைதனிலேயுள்ளவர்க்கு நன்றாய்காட்டி
நேராகவாய்தனிலே போட்டுக்கொண்டு
நில்லடிபகவதி காளியென்று
சிரப்பாகசபையிலுள்ளோர் ஆச்சரிக்க
சத்தியமாய்சொன்னேன்காண் செய்துபாரே

(வ-ம்)கால்பலக்கற்பூரம் வாயில்போட்டு மென்று வாயெல்லா ம்நன்றாய்ப் படும்படியாய் குழப்பிதுப்பிவிட்டு பந்தம்கொளுத்திவா யில்போட்டுக்கொண்டால்பார்த்தவர்ஆச்சரியப்படுவார்வால்சுடாது

தேள்கொட்டினால்ஏறாமல்யிருக்கும்ஜாலம்.

மைந்தனேஞாயிற்றுக் கிழமைதன்னில்
மருவாமைக்கருங்கருணை செடியைக்கண்டு
சிந்தையிலேகணபதியை தியானஞ்செய்து
சிறப்பாகதூபமிட்டு காப்புகட்டி
வந்துவிடுஅன்றைக்கே அந்திசென்று
வளமானஅச்செடியின் வேரைக்கொள்ளு
சிந்தைமகிழ்குளிசமாடி கையிலிட்டு
ஜெகத்திலுள்ள தேள்கடித்தால் விஷமேறாதே

(வ-ம்) ஞாயிற்றுக் கிழமைதினம் கருங்கருணை செடியைக் கண் டுதூபங் கொடுத்து நூலில்மஞ்சள் தடவிகாப்பு கட்டிவிட்டு அன் றுசாயந்திரம்சென்று அந்தசெடியைப் பிடுங்கி அடிவேரை குளிசத்

இலாவது வேரைமோதிரம்போல் சுற்றியாவது வெறலில்போட்டுக் கொண்டுதேளை கொட்டவிட்டு வேடிக்கைகாட்டவும் விஷமேறாது

தேங்காயைபானையின்மீதுவைத்து பானையுடையாமல்
தடியாலடித்துதேங்காயைவுடைக்குஞ்ஜாலம்.

கண்டவர்கள் திடுக்கிடவே மனங்கலங்க
கண்மணியேஞாயிற்று கிழமைதன்னில்
மண்டலத்தில்வுனைமதிக்க கீழாநெல்லி
மைந்தனே தூபமிட்டு பிடிங்கிவந்து
கொண்டுமேகொயவனிட தோண்டிநீதான்
கொப்புரவேகவிழ்த்து வேரேசிம்மாடிட்டு
கண்டிருக்குந்தேங்காயை அதுமேல்வைத்து
தடியாலேஅடித்தொடித்து காட்டலாமே

(வ-ம்) கீழாநெல்லிசெடியை நாயிற்றுக்கிழமை தன்னில் தூபம்காட்டி காப்புகட்டி அன்றுசாயங்காலஞ் சென்றுபிடிங்கிவந்து அந்தவேரைநாலு ஐந்துசேர்த்து முருக்கி சிம்மாட்டைப்போல் சுற்றிக்கொண்டு தோண்டியைக் கவிழ்த்து சிம்மாட்டைவைத்து அதின்மேல் தேங்காயைவைத்து தடியாலடித்தால் தேங்காவுடைந்து விடும்தோண்டி வுடையாது மகாதந்திரமாக அடிக்கவேண்டியது அக

கிணத்தில் தோண்டிபோட்டால் தண்ணீர்
மொள்ளாதிருக்குஞ்ஜாலம்

கொண்டுவாபச்சோந்தி கொண்டுவந்து
குணமானதேன்விட்டு அரைத்துநீதான்
கண்டவர்கள் அதிசயிக்க தோண்டின்கீழே
கருத்துடனேயிதுயெடுத்து பூசிவிட்டு
மொண்டுவாஜலமென்று கொடுத்தனுப்பு
முழித்திடுவார்ஜலம்வந்து மெள்ளாதப்பா
யெண்டிசையில்வுள்ளவர்கள் மதிமயங்கி
யென்னமோகெங்கையம்மன் குற்றமென்பார்

(வ-ம்)தோண்டியைக் கொண்டுவந்து பச்சோந்தியை தேன்விட்டரைத்து தோண்டியின் கீழ்பூசிவிட்டால் தண்ணீர்மொள்ளாது கிணற்றில் கண்டவர்கள் யென்னமோபிரளயமென்று முழிப்பார்கள் பச்சோந்தியென்பது பசசை ஓணன் அஉ

ஆரும்பாகம்- முற்றிற்று

இனி ஏழாம்பாகம்.